விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 067 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 12 வியாழக்கிழமை (24.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# 3 தமிழ் அரசியல் கைதிகள் யாழ்.சிறையில் உணவு தவிர்ப்பு

### ஆளுநர் அலுவலகம் முன் உறவுகளும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த அரசியல் கைதிகள் நேற்று அதிகாலை முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக கடிதம் மூலம் சிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளனர்.

இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன் 15

# இன்றும் நான்கரை மணிநேர மின்வெட்டு

(கொழும்பு)

நாடு முழுவதும் இன்று வியாழக்கிழமையும் 4 மற்றும் நான்கரை மணிநேர மின்வெட்டு அமுல் செய்யப்படவுள்ளது.

மின்னுற்பத்தி நிலையங்களில் மின் 15

### கரணவாயில்

# 12 வயது சிறுமி சடலமாக மீட்பு

(கரணவாய்)

12 வயது சிறுமி ஒருவரின் சடலம் நேற்று புதன்கிழமை இரவு பருத்தித்துறை 15

# மின்வெட்டு தொடர்பில் நீதிமன்றை நாடலாம்

### சபையில் ரணில்

(கொழும்பு)

அறிவிக்கப்பட்ட கால அட்டவணையை மீறி மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டால் பொதுமக்கள் நீதிமன்றத்தை நாட முடியும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய 15

### இலங்கையின் நெருக்கடிக்கு

# ஒத்துழைக்க இந்தியா தயார்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



*(புதுடில்லி)*

இலங்கையின் நிதி நெருக்கடியை தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இந்தியா அறிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இதனைத் தெரிவித்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

# 'டீசல் இல்லை'




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் "டீசல் இல்லை" என்ற பதாதை வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதி மருதனார் 15

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து கொழும்பில் பேரணி



(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண கடற்பரப்பில் அத்துமீறிய வகையில் மீன்பிடி நடவடிக் 15

### உக்ரைனில் போர்ப் பதற்றம்

# பொதுமக்கள் துப்பாக்கி வைத்திருக்க அனுமதி

(கீவ்)

உக்ரைனில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை உக்ரைன் 2 இலட்சம் ரிசர்வ் படைகளை திரட்ட ஆரம்பித்துள்ளது. இதற்காக நாடு முழுவதும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் படையில் இணைபவர்கள் ஒரு வருடம் பணியாற்ற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 15

### அத்தியாவசியப் பொருட்களை

# தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை: நிதியமைச்சர் பசில்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுக் காலை 15

### எரிவாயு, அரிசி, சீனி, பால்மா, சீமெந்து

# தட்டுப்பாடு இருப்பது உண்மையே

### சபையில் ஒப்புக்கொண்டது அரசு

(கொழும்பு)

அண்மைய நாட்களில் எரிவாயு, அரிசி, சீனி, பால்மா மற்றும் சீமெந்து தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

நேற்று பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தற்போது எரிவாயு, சீனி மற்றும் அரிசிக்கு தட்டுப்பாடு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் ஊடகவியலாளர் வீட்டில் பட்டப்பகலில் வீடு உடைத்து பணம், நகை திருட்டு

(வவுனியா)

வவுனியாவில் பெண் ஊடக வியலாளர் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் வீடு உடைத்து பணம், நகைகள், கமரா என்பன திருடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வசிக்கும் பெண் ஊட கவியலாளர் ஒருவர் செய்தி அறிக்கையிடல் ஒன்றுக்காக காலை 10.50 மணிக்கு வீட்டில் இருந்து சென்றுள்ளார். கணவர் வர்த்தக நிலையத்திற்கும் பிள் ளைகள் தனியார் கல்வி நிலை யத்திற்கும் சென்றுள்ளனர்.

குறித்த ஊடகவியலாளர் மதியம் 12.15 மணியளவில் கடமை முடிந்து தனது பிள்ளையுடன் வீட்டிற்கு சென்றபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு திறந்து காணப் பட்டுள்ளது. வீட்டின் இரு அறைகளிலும் காணப்பட்ட அலு மாரிகள் உடைக்கப்பட்டு இரு ந்ததுடன், வீட்டில் இருந்த பொரு ட்களும் பரவிக் காணப்பட்டு ள்ளன.

அத்துடன், வீட்டில் இருந்த சங்கிலி, மோதிரம், கைச்செயின், தோடு உள்ளிட்ட 14 பவுண் நகைகள், 42 ஆயிரம் ரூபாய் பணம், கமரா, தொலைபேசி, பென்ரைவ் உள்ளிட்ட பல இலட் சம் பெறுமதியான பொருட்கள் காணாமல் போயிருந்தன. இத னையடுத்து வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸில் பாதி க்கப்பட்ட ஊடகவியலாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-250)

# உயர்தர பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய பெண்ணை ஓட்டோவில் கடத்திய ஆசிரியர்

மட்டு. கொக்கட்டிச்சோலை- அரசடித்தீவு பாடசாலையில் உய ர்தர பரீட்சைக்கு சென்று திரு ம்பிய 21 வயதுடைய பெண் ஒருவரை நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் முச்சக்கர வண்டியில் சென்ற ஆசிரியர் உள்ளிட்ட குழுவினர் கடத்திச் சென்றுள்ளதாக பெண் ணின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள 21 வயதுடைய பெண் ஒருவருக் கும் மகிழடித்தீவு பாடசாலை ஒன்றில் கற்பித்து வந்த 31 வயதுடைய ஆசிரியர் ஒருவரு க்கும் இடையே காதல் ஏற்பட்ட நிலையில் பெண்ணின் வீட்டிற்கு ஆசிரியர் சென்று வந்துள்ளார்.

இந்த நிலையில் பெண்ணின் வீட் டார் ஆசிரியரை திருமணம் முடிப் பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் குறித்த பெண் அரசடி த்தீவு பாடசாலையில் உயர்தரப் பரீட்சை க்குச் சென்று பரீட்சை எழுதிவிட்டு பாடசாலையில் இரு ந்து வெளியேறி வீதியில் நடந்து சென்றபோது முச் சக்கரவண்டி ஒன்றில் சென்ற ஆசி ரியர் உள்ளிட்ட குழுவினர் பெண் ணை இழுத்து முச்சக்கரவண் டியில் ஏற்றி கடத்தி சென்றுள்ளதாக பொலி ஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.(ம)

# கொரோனாவால் 31 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 31 பேர் கோவிட்-19 தொற்றினால் உயிரி ழந்துள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் இது வரையில் கோவிட்-19 தொற்றி னால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,086 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

# நாட்டில் மேலும் +1,281 பேருக்கு தொற்று

கோவிட் தொற்று உறுதி யான மேலும் 1,281 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

இதற்கமைய, கோவிட் தொற்று உறு திப்படுத்தப்பட்டவர்க ளின்மொத்த எண்ணி க்கை 640,578 ஆக அதிகரித்துள்ளது.(ம)


உ

ஜெய்குருதேவ்



மீண்டும் யாழ். மண்ணில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருதேவரினால் வடிவமைக்கப்பட்ட

வாழும் கலைப் பயிற்சி - பாகம் 1

(ஆனந்த அனுபவம்)

பிராணாயாமம், எளிமையான, இலகுவான யோகாசனங்கள், சக்திமிக்க சுதர்சனக்கிரியா, தியான வழிமுறைகள் அடங்கிய உடல், உள, சமூக, ஆன்மீக மேம்பாட்டுப் பயிற்சி.

காலம் : 25, 26, 27 ஆம் நாட்களில் மாலை 4.00 - 6.00 மணிவரையும்

இடம் : நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபம்

பயிற்சியில் கலந்து உங்களை உணர்ந்து அன்பிலே மலருங்கள்.

முன்பு பயிற்சி பெற்றவர்களும் இணைந்து பயன் பெறலாம்.

தொடர்பு- 077 864 5971

(10341)



சேவைநலன் பாராட்டு



25.02.2020 தொடக்கம் எமது பாடசாலையில் OES ஆக சேவையாற்றி 20.02.2022இல் ஓய்வுபெற்றுச் சென்ற

அந்தோனி ராஜசிங்கம்

(OES Grade I)

அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

1991 முதல் 2022 வரை சேவையாற்றிய பாடசாலைகள்

- யா/புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி
- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
- யா/ஒஸ்மானிய கல்லூரி
- யா/செங்குந்த இந்துக் கல்லூரி

வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்:-

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,

யா/செங்குந்த இந்துக் கல்லூரி

(C-3835)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

35 ஆவது பட்டமளிப்பு வைபவம்

1. கலைமாணி
2. வணிகமாணி
3. வியாபார முகாமைத்துவமாணி
4. நடனமாணி
5. இசைமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் 2.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டமளிப்பு வைபவத்தினை 5.03.2022 (சனிக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக விளையாட்டரங்கில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வைபவத்திற்கான பட்டஅங்கி மற்றும் நுழைவுச்சீட்டுகளை 26.02.2022 (சனிக்கிழமை), 27.02.2022 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 28.02.2022 (திங்கட்கிழமை) ஆகிய தினங்களில் அலுவலக நேரத்தில் (காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் மாணவர் பதிவேட்டு புத்தகத்தினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளமுடியும். அத்துடன் இணையவழி மூலம் வேண்டுகோள் படிவத்தினை (Supplication Form) சமர்ப்பித்தவர்கள் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை சமர்ப்பித்தல் அவசியமானதாகும்.

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் **021 222 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**இணையத்தள முகவரி : http://www.codl.jfn.ac.lk/**

பதிவாளர்

23.02.2022

(C-3834)



**University of Jaffna, Sri Lanka**

**WALK-IN-INTERVIEW**

A walk in interview for the post of **MECHANIC** on **daily paid** basis will be held on **09.03.2022 (Wednesday) at 9.30 a.m** at the Board Room of the University.

**Qualifications:**

i. Pass in the 8th Standard

ii. Should be conversant with

a. Reading scales, micrometres and recording fractional dimensions.

b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;

and

c. Reading and understanding drawings,

iii. Not less than 2 years' experience as a Mechanic or Machine Operators.

**Age:** Applicants should be less than 40 years of age.

**Salary : Rs.1,923/= per day**

Candidates are requested to appear with relevant certificates, NIC and **self-prepared applications.**

**Registrar**

**University of Jaffna**

**21.02.2022**


(C-3833)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை கேள்வி கேட்கும் தார்மீக உரிமை இந்தியாவிற்கே உள்ளது-விக்னேஸ்வரன் எம்.பி

(சாவகச்சேரி)

**இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை கேள்வி கேட்கும் தார்மீக உரித்து, சட்டரீதியான உரித்து இந்தியாவிடம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



கடந்த சனிக்கிழமை விழுது சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற அரசியல்வாதிகளை அணுகும் நிகழ்வில் "13 ஆவது திருத்தச் சட்டத்தில் காணி, பொலிஸ் அதிகாரம் இருந்தும் இல்லாத நிலை" தொடர்பாக மக்களால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை 13 ஆவது தொடர்பாக கேள்வி கேட்கும் தார்மீக உரித்து, சட்டரீதியான உரித்து இந்தியாவிடம் தான் இருக்கிறது.

இந்தியா இது தொடர்பாக கோரிக்கை விடுத்தால் இலங்கை அரசாங்கம் அதற்கு காது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் இந்தியாவிற்கு கடிதம் அனுப்பி உள்ளோம்.

சட்டத்தில் இருக்கும் ஒன்றை நடைமுறைப்படுத்தாது இருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு நெருக்குதல்கள் ஏற்பட்டால் அதனை செய்ய முன்வருவார்கள் என்பது எனது கருத்து.

நாமாக இலங்கை அரசாங்கத்திடம் கேட்டு அதனைப் பெற இயலாது. நான் முதலமைச்சராக இருக்கும் போது இது தொடர்பாக அரசாங்கத்திடம் கோரியிருந்தேன். அப்போது அது தொடர்பாக நாம் யோசிக்கிறோம்; கொள்கையின் படி மாகாணத்திற்கு காணி, பொலிஸ் அதிகாரம் கொடுக்க முடியாது என்று பதிலளித்தனர். கொள்கை அடிப்படையில் தர முடியாது என்றால் கொள்கை அடிப்படையில் சிந்தித்தே கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

இலங்கை-இந்திய ஒப்பந்த கையொப்பத்தின் போது கொள்கை பற்றி சிந்திக்காது கையொப்பமிட்டு விட்டு கொள்கை அடிப்படையில் முடியாது என்பது சரியானதல்ல. பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் கட்டாயம் தரப்பட வேண்டும். இது சம்பந்தமாக இந்தியாவின் தலையீட்டினை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்றோம்.

எங்களின் இலக்கு, கொள்கை, எதிர்பார்ப்பு ஒரு சமஷ்டி ரீதியிலான அதிகாரம் வடக்கு-கிழக்கிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதே. 13 ஆவது திருத்தச் சட்டம் தற்போது சட்டத்தில் இருப்பதனை நடைமுறைப்படுத்தக் கோருவதே என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-30)

## அரசாங்கத்தின் மேலதிக வரிச் சட்டமூலம் உயர் நீதிமன்றத்தை நாடியது எதிர்க்கட்சி

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிக வரிச் சட்டமூலத்தை சவால் செய்து உயர் நீதிமன்றில் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஐக்கிய மக்கள் சக்தி, விசேட மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் நேற்று முன்தினம் மேலதிக வரிச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானது என உத்தரவிடக் கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் நேற்று புதன்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2000 மில்லியன் ரூபாவுக்கு அதிகமாக வரி அறவிடக்கூடிய வருமானத்தை ஈட்டும் நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீத மேலதிக வரியை அறவிட அரசாங்கம் தீர்மானித்தது.

அதன்படி ஒரு தடவை மாத்திரம் அறிவிடப்படும் 25 சதவீத மேலதிக வரி தொடர்பான குறித்த சட்டமூலத்திற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனை அடுத்து ஈ.பி.எப் மற்றும் ஈ.ரி.எப் ஆகியவையும் மேலதிக வரிக்கு உட்படுத்தப்படும் என நிபுணர்கள், எதிர்க்கட்சியினர் உள்ளிட்டவர்கள் கவலை வெளியிட்டிருந்தனர்.

எனவே 2022 வரவு-செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்ட 25% மேலதிக வரியிலிருந்து ஈ.பி.எப், ஈ.ரி.எப் உள்ளிட்ட 9 பிற நிதியங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நிதியமைச்சர், திறைசேரி செயலர் நாளை இந்தியா விஜயம்

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல ஆகியோர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அதற்கமைய நாளை இந்த விஜயத்தை இருவரும் மேற்கொள்ளவுள்ளனர். (நி)

## உயிர்த்த ஞாயிறு அறிக்கையை வெளியிடுமாறு ஐ.நா.கோரிக்கை

### தென்னிலங்கை ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பு இலங்கையின் தேசிய பாதுகாப்பில் நேரடியாக தலையிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்த தகவலை அரச தரப்பை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான இரகசியங்கள் அடங்கிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் கோரியுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த அறிக்கையை இன்னும் வெளியிடாத நிலையில், அதனை வெளியிடுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கோரியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து உளவுத்துறை அதிகாரிகள் அளித்த இரகசிய தகவல்கள் அந்த அறிக்கையில் இருப்பதாக கூறப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இந்த அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு கோரியதன் மூலம் தேசிய பாதுகாப்பில் நேரடியாக தலையிட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான இறுதி அறிக்கையை அரசாங்கம் தமக்கு வழங்கவில்லை என கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஊழியர் சேமலாப நிதியில் இருந்து 30 வீத நிதியை இலகுவாக பெறலாம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியின் புதிய சட்டத்திருத்தத்திற்கு அமைய எதிர்காலத்தில் 30% நிதியை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தொழிலாளர் ஆலோசனை சபையின் மாதாந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை, ஊழியர் சேமலாப நிதியின் 30% பயனாளிகளின் நிதி வீட்டுக் கட்டுமான பணிகள் அல்லது மருத்துவ சிகிச்சைக்காக மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது.

அதைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர்கள் கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. பல சிறப்பு ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய விதிமுறைகள் காரணமாக ஊழல், முறைகேடுகள் மற்றும் மோசடி நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றமை தெரிய வந்துள்ளது.

இந்த ஆவணங்களை தயாரிப்பதில் விண்ணப்பதாரர்கள் பெரும் தொகையை செலவு செய்வதாக கிடைத்த முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு தேவையற்ற செலவுகளை குறைக்கும் நோக்கத்தில் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனவே, எதிர்காலத்தில் உறுப்பினர்கள் தமது தேவைகளுக்காக 30% நிதியை ஊழியர் சேமலாப நிதியிலிருந்து இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், தொடர்ந்து பத்து வருடங்களாக ஈ.பி.எப் திணைக்களத்திற்கு 300,000 ரூபாவுக்கு மேல் பங்களிப்பு செய்த உறுப்பினர்கள், இந்த 30% முழு நிதியை பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்கள் என அமைச்சர் தெரிவித்தார். (நி)



உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகெதென்ன, பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் எம் அம்ஜத் கான் நியாசியை நேற்று முன்தினம் பாகிஸ்தான் கடற்படைத் தலைமையகத்தில் சந்தித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கெதிரான தொடரிலிருந்து வனிந்து விலகல்



இந்தியாவுக்கு எதிரான இருபது-20 தொடரில் விளையாடும் வாய்ப்பினை இலங்கை அணியின் சகல துறை வீரர் வனிந்து ஹசரங்க இழந்துள்ளார்.

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது கொரோனா தொற்றுக்குள்ளான ஹசரங்க, இன்னும் அதிலிருந்து குணமடையாத காரணத்தினால் அவர் இந்தியாவுடனான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடும் வாய்ப்பினை இழந்துள்ளார்.


கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில் முன்னதாக ஹசரங்க அவுஸ்திரேலியாவுடனான இறுதி மூன்று போட்டிகளிலும் விளையாடவில்லை.

அவரது 7 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்த போதிலும், அண்மையில் அவருக்கு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் மீண்டும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அவர் அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (4-6)

# இலங்கைக்கு எதிரான தொடர் தீவிர பயிற்சியில் இந்தியா

இலங்கைக்கு எதிரான இருபது -20 தொடரை முழுமையாக கைப்பற்றும் நோக்கில் இந்திய அணி வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுட்டுள்ளனர்.



இந்தியா வந்துள்ள இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளும் மோதும் முதல் போட்டி இன்று உள்ளூர் நேரப்படி 7 மணியளவில் லக்னோவில் நடைபெறும்.

ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிஷனில் இந்த போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

சமீபத்தில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரையும், 20 ஓவர் தொடரையும் இந்தியா கைப்பற்றியது.

சொந்த மண்ணில் நடந்த இந்த போட்டிகளில் ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக்கிலும், 20 ஓவர் தொடரை 3-0 என்ற கணக்கிலும் கைப்பற்றி ஒயிட்வாஷ் செய்தது.


எனவே அதேபோன்ற சிறப்பான ஆட்டத்தை இலங்கைக்கு எதிரான தொடரிலும் வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபது-20 தொடரை 1-4 என்ற கணக்கில் இலங்கை இழந்துள்ள நிலையில், இந்தியாவுக்கு எதிராக தொடரை கைப்பற்ற முயற்சிக்கும், எனினும் சொந்த மண்ணில் இந்தியாவை வீழ்த்துவது கடினமாக இருக்கலாம் என தெரிகிறது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2521

**சர்மிலன்**

எத்தன வாட்டி குளிச்சாலும் ஊத்துற தண்ணி உடம்புலயே நிக்காம கீழே வேஸ்ட்டா போகுது...



அப்புறம் எதுக்கு குளிக்கனும்.....

**கபினா**

மாமியாரை பாரமாக பார்த்து, விலகி வந்து வாடகை வீடு பார்த்தாள்...!



வாடகைக்கு இனாமாக, புது மாமியார் கிடைத்தார்...வீட்டு ஓனர் வடிவில்

**லக்ஷன்**

IT கம்பெனியில வேல பார்க்குறேனு.. சொல்லி தானே என்னை கல்யாணம் பண்ண..!



Iyyanar Tea கடையில வேல பார்த்துட்டு IT கம்பெனினு ஏமாத்துறா நீ...

**மஞ்சு**

எத்தனை இலட்சம் போட்டு வீடுகட்டினாலும்....



பழைய பெயின்ட் டப்பா தான் பாத்ரூம் பக்கெட்..



**கஜிவன்**

அவசரத்துக்கு ஒரு கொத்தனார தேடினேன். ஊருக்குள்ள ஒருத்தனும் இல்ல. ஆனா...



தெருவுக்கு நாலு இன்ஜினியர் இருக்கானுக

**சர்மிளா**

பட்டுப் போன மரத்திற்கு பறவைகளும் வருவதில்லை!!



பணமில்லாதவன் வீட்டுக்கு உறவுகளும் வருவதில்லை!!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிற்றமோல் மாத்திரைகளுக்கான கேள்வி அதிகரிப்பு-சன்ன ஜயசுமண

(கொழும்பு)

**ஒமிக்ரோன் தொற்று டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல்களின் அச்சுறுத்தல்களின் காரணமாக கடந்த மூன்று வாரங்களில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்கான தேவை அதிகரித்துள்ளதாக மருந்து உற்பத்தி வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரம், ஓயாமடுவ பிரதேசத்தில் நேற்று "சுவசிறிபுர" மருத்துவ உற்பத்தி வலயத்தை நிர்மாணிப்பது தொடர்பாக மூன்று நிறுவனங்களுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

உலக சந்தையில் பரசிட்டமோல் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்களின் விலை அதிகரித்ததன் காரணமாக பெரும்பாலான நிறுவனங்கள் அவற்றை இறக்குமதி செய்வதை தவிர்த்து வருகின்றன.

இதனால் உள்ளூர் சந்தையில் பரசிட்டமோல் மாத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே தேவையான இருப்பிலுள்ள பரசிட்டமோல் மாத்திரைகளை அவற்றின் அதிக பட்ச கொள்ளளவில் தயாரிப்பதற்கு மருந்து உற்பத்தி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதுள்ளதுடன் தினமும் மூன்று மில்லியன் பரசிட்டமோல் மாத்திரைகளையும் தயாரித்து வருகின்றது.

எனவே பரசிட்டமோல் மாத்திரைகளின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் சில நாட்களுக்குள் தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படும் எனத்தெரிவித்தார். (நி)

# நாட்பட்ட நோய்களே உயிரிழப்பிற்கு காரணம்

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழக்கும் 30 வயதுக்குட்பட்டவர்களின்மரணத்திற்கு கொரோனாத் தொற்று பிரதான காரணம் அல்ல என சுகாதார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்தஹேரத்தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழந்தவர்களில் பலர் சிறுவயது முதலே நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள்.

இவ்வாறு மரணிப்பவர்களுக்கு சிறுநீரக நோய் மற்றும் நரம்பு மண்டலம் சார்ந்த நோய் கள் மரணத்துக்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (நி)



யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் தூய அழகிய நகர துரித அபிவிருத்தி திட்டத்தின் மற்றொரு செயற்பாடாக நாயன்மார்கட்டு குளம் புனரமைக்கப்படவுள்ளது. இந்நிலையில் குளத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பமாகியது. (படம்:-கஜிந்தன்)

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் ஜனாதிபதி வதிவிடத்தை முற்றுகையிடுவோம்

## மீனவர் போராட்டத்தில் சாணக்கியன் எச்சரிக்கை



(கொழும்பு)

வட பகுதி மீனவர்களின் பிரச்சனைகளுக்கு அரசாங்கம் தீர்வினை பெற்றுத்தர தவறினால் ஜனாதிபதி அலுவலகத்தினையோ அல்லது ஜனாதிபதியின் இல்லத்தினையோ முற்றுகையிட்டு போராட்டம் முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட மீனவர்களுக்கு ஆதரவான போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுதர அரசாங்கம் தவறினால் போராட்ட வடிவம் மாற்றம் பெறும்.

குறிப்பாக ஜனாதிபதி அலுவலகத்தினையோ அல்லது ஜனாதிபதியின் இல்லத்தினையோ முற்றுகையிட்டு போராட்டம் முன்னெடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)


# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலக கலாசார
உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.
விஜிதா செல்வகுமார் அவர்களின் பாசமிகு தாயார்
அமரர்.திருமதி.நடராஜா அமிர்தாம்பிகை
அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்
தை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.

(c-3825)


# இராசிபலன்

24.02.2022
மாசி 12, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 1.54 மணிவரை

அனுசம் பிற்பகல் 12.29 மணிவரை
சுபநேரம் - 8.00-9.30 மணிவரை
இராகுகாலம் -2.00-3.30 மணிவரை

அட்டமி-நவமி
சந்திராஷ்டமம்-பரணி

வளவன்

**மேஷம்** வழிபாட்டால் வளர்சி காண வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை, ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு தடவை அலைய நேரிடலாம்.

**ரிஷபம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்** செயற்பாடுகளில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார -விருத்தியுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**கடகம்** நீண்ட நாளைய விரும்பங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும்.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கன்னி** மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சியுண்டு.

**விருச்சிகம்** ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** உடல் நலனில் இடையூறுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறும் வாய்ப்புண்டு, அலைச்சலும் சற்று அதிகரிக்கும்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பிறர் உதவியுண்டு, பொதுவாழ்வில் கௌரவம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனக்குழப் பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

குறுகிய மனித வாழ்வில் காலத்தை வீணாக்காதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெற்செய்கை பாதிப்பு

# பாரிய நட்டத்தில் கரவெட்டி விவசாயிகள்



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கரவெட்டி கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் நெற் செய்கை மேற்கொண்ட நிலையில் பெரும் நட்டத்திற்கு உட்பட்டுள்ளதாக அப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் பெய்த மழையினால் நெற்கதிர்கள் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கரவெட்டி விவசாய திணைக்களம் எவ்விதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

மழைநீர் ஓடுவதற்கான வாய்க்கால் அமைப்பு சிறந்த முறையில் அமைத்து கொடுக்கப்படவில்லை.

இதனால் நெற்செய்கைகள் அழிவடைந்து பாரிய நட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளோம்.

உடனடியாக விவசாய உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு அதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4-6-60)



சாரண ஸ்தாபகர் பேடன் பவலின் 165 ஆவது வருட தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை யாழ். மாவட்ட சாரணர் தலைமைச் செயலகத்தில் சாரணர் தலைவர் மஞ்சுதன் தலைமையில் இடம்பெற்றது. (படம்-சுபேசன்)

## குமுதினிப் படகின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(அராலி)

நெடுந்தீவு - குறிகட்டுவான் கடற்போக்குவரத்தில் ஈடு பட்டுவந்த குமுதினிப்படகானது நீண்டநாட்களாக செயற்பாடற்றநிலையில் உள்ளது.

இதனையடுத்து குறித்த விடயத்தை, அப்பிரதேச மக்கள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

அவரது துரித நடவடிக்கையில் 1 கோடி 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நேற்று ஒப் பந்தகாரருக்கான அறிவுத்தல் கள் வழங்கப்பட்டு, இம்மாத இறுதியில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. (4-6-104)



# யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா பகுதி II

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக 35 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா பகுதி - II எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் , 4 ஆம் மற்றும் 5 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் 6 அமர்வுகளாக இடம்பெறவுள்ளது என பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

### 13 ஆவது திருத்தம் தொடர்பில்

## லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுக் கருத்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை பலப்படுத்தி அதன் மூலம் மாகாண சபையினைப் பாதுகாத்தல் எனும் தலைப்பில் பொதுக் கருத்துரையாடல் லங்கா சமசமாஜக் கட்சியின் ஏற்பாட்டில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி த. விக்னராஜா, வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அனைவரையும் இக் கருத்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் புத்தகக் கண்காட்சி நிகழ்வு நல்லூர், ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நாளை 25 , 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்நிகழ்விலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடுகளின் கண்காட்சி நிகழ்வும் விசேட விலைக் கழிவுடன் கூடிய விற்பனையும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அனைவரும் வருகை தந்து பயன்பெறுமாறு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. (4-6)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் 25 மில்லிகிராம் ஹெரோயினுடன் 22 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-104)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் புங்குடுதீவு கண்ணகி அம்மன் என வழங்கும் அருளமிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.மதுசூதனக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயண நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6)

# யாழ். போதனாவில் தொற்றாளர் மாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மீசாலை வடக்கு பகுதியை சேர்ந்த 45 வயதான நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். காய்ச்சல் காரணமாக கடந்த 16 ஆம்திகதிசாவகச்சேரிஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குறித்த நபருக்கு அன்டிஜன் பரிசோதனை செய்யப்பட்டதில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

நோய் தீவிரமடைந்ததால் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். மறுநாள் 17 ஆம் திகதி யாழ். போதனா மருத்துவமனைக்கு அவரது மனைவி சென்று பார்த்தபோது கணவனை அங்கு காணவில்லை. இதனையடுத்து சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாடு செய்துள்ளார்.

இந் நிலையில் சம்பவம் தொடர் பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-33)

## மருத்துவமனை நோயாளர் விடுதி திறப்பு

(கரணவாய்)

MJF அறக்கட்டளை நிதியத்தினதும் Ian and barbara karan அறக்கட்டளை நிதியத்தினதும் 110 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் அமைக்கப்பட்ட பருத்தித் துறை ஆதார மருத்துவ மனையின் மூன்று மாடி நோயாளர் விடுதி கட்டடத் தொகுதி நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக மருத்து வமனை நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-6-60)

## பேச்சுத்திறன் காணும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்திலுள்ள ஞானக்குழந்தை இல்லங்களின் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ராஜா கிறிம் கவுஸ் கம்சிகா மண்டபத்தில் பாலர் கல்விக்கழக தலைவர் கலாநிதி பா. காசி நாதன் (J.P) தலைமையில் இடம்பெறும்.(4)

## மஹோற்சவம்

யாழ். ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அரசடி ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாடு

# 250 தனியார் பேருந்து சேவைகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மாகாணங்களுக்கிடையில் நாளாந்தம் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் 250 தனியார் பேருந்து சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மாகாணங்களுக்கிடையிலான தனியார் பேருந்து போக்கு வரத்து சேவை சங்கத்தின் தலைவர் சரத் விஜித் குமார தெரிவித்தார்.

நாட்டில் தற்போது தோற்றம் பெற்றுள்ள எரிபொருள் பற் றாக்குறை காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள். மாகாணங்களுக்கிடையில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளை முழுமை யாக சேவையில் ஈடுப்படுத்த முடியாத நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் போக்குவரத்து சேவையில் ஈடுப்படும் 3200 தனியார் பேருந்துகளில் தற்போது 2000 ஆயிரம் பேருந்துகள் மாத்திரமே சேவையில் ஈடுப்படுத்தப்பட்டன.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மாகாணங்களுக்கிடையில் நாளாந்தம் போக்குவரத்து சேவையில் ஈடுப்படும் பேருந்துகளில் 250 பேருந்துகளின் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண போக்குவரத்து அமைச்சு உரிய நடவடிக் கையினை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

# 43 வருடங்களின் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருகிறது

## டில்லியில் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மிகவும் விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வெளியிடுவதற்கான ஆரம்பப் படியாகும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியை தளமாகக் கொண்டுள்ள இராஜதந்திரப் படையினருக்கு மத்தியில் உரையாற்றிய போது வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முன்னேற்றம் குறித்த தகவல்களைப் பகிர்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும் என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

43 வருடங்களின் பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாகக் கொண்டு வரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கணிசமான திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவுப் பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், கட்டுப்பாட்டு ஆணைகள், உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல்.

நீண்ட காலமாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களின் வழக்குகளை விரைவாகத் தீர்த்து வைத்தல்,கருத்துச் சுதந்திரத்திற்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல், நீதிவான்கள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகளின் அணுகலுக்கான விதிகளை அறிமுகப்படுத்துதல்,

தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்பு கொள்ளும் உரிமை, நீண்டகாலக் கைதிகளுக்கு பிணை வழங்குதல், வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற அம்சங்கள் உள்ளடங்குவதாக அவர் குறிப்பிட்டார். (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா:சூரி 3 செவ் 5 இல்<br>உயரம் 6'4"<br>தகைமை/தொழில்: கென்றாக்ரர் (வேலையாட்களை வைத்து வேலை செய்பவர்)<br>எதிர்பார்ப்பு:சைவபோசணம் அசைவமும் ஏற்றுக்கொள்ளப்படும்.<br>தொ.இ: B/12330 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா: சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/8995 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 4<br>கி.பா:16 ¾சூரி 4 செவ் 6 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு :படித்த பெண்<br>தொ.இ: B/12333 | பிறப்பு:1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா:சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்:158 cm<br>தகைமை/தொழில்: HNDA<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/9065 |
| பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 2<br>கி.பா :28 சூரி 8 செவ் 6 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில் : பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு வெளிநாடு<br>தொ.இ: B/12334 | பிறப்பு:1978 கிறிஸ்தவம்Non RC<br>உயரம்:5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>விவாகரத்தானவர்<br>தொ.இ:G/9067 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம் 1<br>கி.பா:11 சூரி 6 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: காசாளர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண குடும்பப் பெண்<br>தொ.இ: B/12335 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரி 2 செவ் 3 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்:A/L/I.T/Dip in Eng/ Acc Ass, தனியார்<br>எதிர்பார்ப்பு:படித்தவர் வெளிநாடு மட்டும்PR<br>தொ.இ:G/9078 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரேய்ன் - ரஷ்யா பதற்ற நிலை எண்ணெய் விநியோகம் தடைப்படலாம்

## அச்சத்தில் உலக நாடுகள்

(மொஸ்கோ)

உக்ரேய்ன்-ரஷ்யா நெருக்கடியால் உலகெங்கிலும் எண்ணெய் விநியோகம் தடைப்படும் என்ற அச்சத்தில் எண்ணெய் விலை அதிகரித்த வகையில் உள்ளது.

சர்வதேச அளவுகோலான கச்சா எண்ணெயின் விலை, செவ்வாயன்று பரலுக்கு 99.38 அமெரிக்க டொலர் ( $73) கணக்கில் அதிகரித்துள்ளது.

லண்டனில், FTSE 100 பங்குச் சுட்டெண் 1.4% இற்கும் அதிகமாகக் குறைவடையத் தொடங்கியது.

ஆசிய பங்குச் சந்தைகள் சரிவுடன் முடிவடைந்தன, மேலும் அமெரிக்க பங்குச் சந்தைகள் நட்டத்தை சந்தித்தன.

சவுதி அரேபியாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய எண்ணெய் ஏற்றுமதியாளராக இருக்கும் ரஷ்யா மீது இங்கிலாந்து மற்றும் பல மேற்கத்திய நட்பு நாடுகள் பொருளாதாரத் தடை அச்சுறுத்தல் விடுத்துள்ளன.

உக்ரேய்னின் கிழக்கில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு பகுதிகளை சுதந்திர நாடுகளாக அங்கீகரித்த பின்னர், ரஷ்யா வீரர்களை அனுப்ப உத்தரவிட்டது. டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் மக்கள் குடியரசுகளில் தனது படைகள் அமைதி காக்கும் பணியில் ஈடுபடும் எனரஷ்யாதெரிவித்துள்ளது.

ஆனால் அவர்களை அமைதி காக்கும் படையினர் என்று அழைப்பது "முட்டாள் தனம்" என்றும், ரஷ்யா போருக்கான சாக்குப்போக்கை உருவாக்குவதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மியன்மாரின் இராணுவ ஆட்சி

## தடைகளை நீடித்தது ஐரோப்பிய ஒன்றியம்

(பர்மா)

மியன்மாரின் இராணுவ ஆட்சி மீதான தடைகளை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளது. மியன்மாரில் மனித உரிமை மீறல் குறித்த குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 22 அதிகாரிகளின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

ரோஹிஞ்யா இனத்தினர் மீதான வன்முறைகள் தொடர்பில் சர்வதேச நீதிமன்றத்தில் நடப்பிலுள்ள விசாரணையை மேலும் துரிதப்படுத்தும் விதத்தில் தடையுத்தரவுகள் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த குற்றச்சாட்டுகளை மியன்மாரின் இராணுவ அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது.

அத்துடன், விசாரணையைத் தள்ளுபடி செய்யுமாறும் இராணுவ அரசாங்கப் பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

எனினும் ரோஹிஞ்யா - இன ஆர்வலர்கள் விசாரணை தொடரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பயணத் தடைகளை நீக்கியது ஐரோப்பிய நாடுகள்

ஐரோப்பிய யூனியனில் உள்ள 27 நாடுகளுக்கு செல்வதற்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகள் எளிதான பயணம் மேற்கொள்ளலாம்.

ஐரோப்பிய யூனியனில் 27 நாடுகள் உள்ளன. இந்த நாடுகள் வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியிருந்தது. வருகிற 1 ஆம் திகதியில் இருந்து அவற்றை நீக்கிவுள்ளன.

இதனால் இந்த 27 நாடுகளுக்கும் பணயம் மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகள், பயணம் மேற்கொள்வதற்கு 14 நாட்களுக்கு முன் தடுப்பூசி செலுத்தியிருந்தால் போதுமானது. ஆனால், 270 நாட்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

இல்லையெனில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தால், 180 நாட்கள் முடிந்திருக்க வேண்டும் என அறிவித்துள்ளன.

பெற்றோருடன் வரும் ஐந்து வயதிற்குட்ட குழந்தைகளுக்கு கொரோனா டெஸ்ட் மற்றும் கூடுதல் கவனம் என்று ஏதும் தேவையில்லை. உலக சுகாதார அமைப்பு அங்கீகாரம் அழித்துள்ள தடுப்பூசிகள் செலுத்தியிருக்க வேண்டும் என தெரிவித்துள்ளன. (நி)

# ரஷ்யாவிற்கான எரிவாயு குழாய் திட்டத்தை நிறுத்தியது ஜேர்மனி

(பேர்லிச்)



உக்ரேய்ன் விவகாரத்தால் ரஷ்யா மீது பொருளாதார தடைகள் விதிக்க 27 ஐரோப்பிய நாடுகள் இணக்கம் வெளியிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் ரஷ்யாவுக்கான எரிவாயு குழாய் திட்டத்தை ஜேர்மனி நிறுத்தியுள்ளது.

ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் அருகே உள்ள கடல் பகுதியில் இருந்து ஜேர்மனியின் லப்மின்வரை பால்டிக் கடலுக்கு கீழே ஆயிரத்து 200 கிலோ மீற்றர் நீளத்துக்கு நார்ட் ஸ்ட்ரீம்-2 என்ற எரிவாயு குழாய் மூலம் ரஷ்யாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு எரிவாயுவை கொண்டு செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே நார்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய் திட்டத்துக்கு வழங்கிய ஒப்புதலை ஜேர்மனி இடை நிறுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் இப்பணிகள் முழுமையாக முடிந்தாலும் இன்னும் எரிவாயு கொண்டு செல்லப்படாத நிலையில் அதற்கான ஒப்புதலை ஜேர்மனி இரத்து செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பள்ளத்தில் பாய்ந்த பேருந்து ஸ்தலத்தில் 14 பேர் பலி



(டில்லி)

உத்தரகாண்டில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

தனக்பூர் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டு திரும்பிக் கொண்டிருந்த பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சுகிதாங் - தண்டமினார் சாலையில் சென்று கொண்டிருந்த போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் குழந்தைகள். பெண்கள் உள்ளிட்ட 14 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ள அதேநேரம் பேருந்தின் சாரதி உள்ளிட்ட இருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உக்ரேய்னுக்கு தொடர்ந்தும் ஆயுதங்கள் வழங்கத் தயார்

(வோஷிங்டன்)

உக்ரேய்னுக்கு தற்காப்பு ஆயுதங்களை தொடர்ந்து வழங்க தயார் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடானஉக்ரேய்ன் 'நேட்டோ' அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா, உக்ரேய்ன் எல்லையில் சுமார் ஒன்றரை இலட்சம் படை வீரர்களை குவித்துள்ளது.

இதனால் ரஷ்யா எந்த நேரத்திலும் உக்ரேய்னுக்குள் ஊடுருவி அந்த நாட்டை ஆக்கிரமிக்கலாம் என அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து எச்சரித்து வருகின்றன.

உக்ரேய்ன் விவகாரத்தில் ரஷ்யாவின் மீது முதல்கட்ட பொருளாதார தடையை அமெரிக்கா விதித்துள்ளது.

சர்வதேச அளவில் அவசர நிதி பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் ஸ்விஃப்ட் முறையையும் அமெரிக்கா துண்டித்துள்ளது.

இந்த நிலையில், உக்ரேய்னுக்கு தற்காப்பு ஆயுதங்களை தொடர்ந்து வழங்க தயார் எனவும், உக்ரேய்ன் மீது ரஷ்யா அத்துமீறல்களில் ஈடுபட்டால் ரஷ்யா மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜோ பிடன் எச்சரிக்கை விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம்

(மன்னார்)

**ஊதிய உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் ஆளுநரின் திருப்திகரமான பதில் கிடைக்கும் வரை தொடர்ச்சியாக இடம்பெறும் என வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.**

கடந்த வாரம் ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது விரைவில் முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டத்திற்கான தீர்வை கலந்துரையாடல் மூலமாக பெற்றுத்தருவதாக ஆளுநர் வாக்குறுதி வழங்கிய நிலையில் முன்பள்ளி ஆசிரியர்களால் அன்றைய தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டிருந்தது



இருந்த போதிலும் இறுதியான, திருப்தியான பதில் கிடைக்கும் வரை முன்பள்ளிகளுக்கு தாங்கள் சமுகமளிக்க போவதில்லை எனவும் தங்கள் போராட்டங்கள் அமைதியான முறையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர். (4-6-285)

# மன்னாரில் இம்மாதம் 488 தொற்றாளர்கள்

## பிராந்திய சுகாதார பணிப்பாளர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 22 நாட்களில் 488 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3672 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மேலும் புதிதாக 14 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களுடன் சேர்த்து பெப்ரவரி மாதம் தற்போது வரை 488 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 3872 கொரோனாத் தொற்றாளர்கள் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 39 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளன.

ஒமிக்ரோன் தொற்றினால் மாவட்டத்தில் 3 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. எனவே மக்கள் சுகாதார நடைமுறைகளை கடைப் பிடித்து மேலதிக வலுவூட்டல் தடுப்பூசிகளை பெற்று தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம் என அவர் தெரிவித்தார். (4-285)



மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு திருக்கேதீச்சரம் திருத்தலப் பாதயாத்திரிகள் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயம் நோக்கிய பாதயாத்திரை நேற்றுப் புதன்கிழமை காலை 10 மணிக்கு செல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சூழலிலிருந்து ஆரம்பமானது. (படம்:-ரவிசாந்)

# பூநகரியில் புதிய கடைத்தொகுதி

(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட் பட்ட பூநகரி வாடியடி பழைய சந்தைப் பகுதியில் 13 மில்லியன் ரூபாய் செலவில் புதிய கடைத் தொகுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பத்து கடைகளைத் கொண்ட தொகுதியாக அமையவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் வளர்ந்து வரும் நகரங்களாக வாடியடி மற்றும் முழங்காவில் என்பன காணப்படுகின்றன. LDSP என்னும் திட்டத்தின் மூலம் நிதி பெறப்பட்டுள்ளது. மிக விரைவில் குறித்த வேலைக்கான கேள்வி கோரல் விடப்படவுள்ளது. (4-5-350)

# மண் அரிப்பை தடுக்க தடுப்புச் சுவர்கள் அமைக்கவும்

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலியாற்றில் இடம்பெறும் மண் அரிப்பை தடுக்கும் வகையில் ஆற்றுக்கு குறுக்காக தடுப்புச்சுவர்களை அமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தின் கீழ் உள்ள பாலியாறு முன்பு ஆழம் குறைந்த ஒரு ஆறாகவே காணப்பட்டது என்றும் தற்போது மண் அரிப்பு காரணமாக ஆற்றின் ஆழம் ஐம்பது அடியையும் தாண்டி விட்டது என்றும் காலப் போக்கில் இவ்வாறு அரிப்பு ஏற்பட்டு மேலும் ஆழமாகக் கூடிய சூழல் காணப்படுவதாகவும் அதற்கான தடுப்புச் சுவர்களை அமைக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேற்குறித்த ஆற்றுக்கு குறுக்காக தடுப்பு சுவர்கள் அமைக்கப்படுவதற்கான போதிய நிதிமூலங்கள் தங்களிடம் இல்லை எனவும் நிதி கிடைக்கும் பட்சத்தில் மேற்படி வேலைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என நீர்ப்பாசனத்திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# நீர்ப் பாதுகாப்பு பயிற்சி பட்டறை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்நிலைகளால் ஏற்படும் அனர்த்தங்களைத் தடுக்கும் இளைஞர்களுக்கான பாதுகாப்பினை ஏற்படுத்தும் பயிற்சி வகுப்பு ஒன்று நாயாறு கடற்படை தளத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையமும் சர்வோதய நிறுவனமும் இணைந்து USAID நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் இளைஞர்-யுவதிகளுக்கான நீர்நிலை பாதுகாப்பு பயிற்சிப் பட்டறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இரண்டு நாள் பயிற்சிப்பட்டறையின் தொடக்க நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (4-281)

# யாத்திரிகர்கள் தங்கும் இடத்திற்கான கட்டுமானப் பணிகளை தடுக்க வேண்டாம்

## திருக்கேதீச்சர கிராம மக்கள் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் திருக்கேதீச்சரம் பகுதியில் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட யாத்திரிகள் தங்கும் இடம் மீள அமைக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த யாத்திரிகர்கள் தங்கும் இடம் அமைக்கும் நடவடிக்கையை தடுத்து நிறுத்த வேண்டாம் என கோரி திருக்கேதீச்சர கிராம மக்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னாரில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு மகஜர் ஒன்றை கையளித்தனர்.

மன்னார் திருக்கேதீச்சர ஆலய வீதியில் பொதுமக்கள் மற்றும் யாத்திரிகர்களின் நன்மை கருதி உரிய அனுமதியுடன் அமைக்கப்பட்டு வந்த குறித்த தங்குமிடத்தின் பணிகள் அண்மையில் எள்ளுப்பிட்டி பகுதியை சேர்ந்த சில மக்களின் எதிர்ப்பால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் குறித்த யாத்திரிகர்கள் தங்குமிடம் சட்டரீதியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு அமைக்கப்பட்டு வருவதுடன், குறித்த பகுதியில் யுத்தத்திற்கு முன்னர் யாத்திரிகர் மடம் ஒன்று காணப்பட்டதாகவும் யுத்தத்தின் போது அழிவடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது கிராம மக்கள் இணைந்து அப்பகுதி மக்களின் நன்மை கருதியும் அதே நேரத்தில் மத வழிபாடுகளுக்கு வரும் யாத்திரிகர்களின் நன்மை கருதியும் குறித்த யாத்திரிகர் தங்குமிடம் மீண்டும் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அனைத்து தரப்பினருடைய முழுமையான அனுமதியை பெற்றுக் கொண்டு குறித்த பணிகள் இடம்பெற்று வருகின்ற போதும் எள்ளுப்பிட்டி மக்கள் சிலரது எதிர்ப்பால் குறித்த பணிகள் இடை நிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த அபிவிருத்தி பணியை தடுக்க எவருக்கும் உரிமை இல்லை என்பதை தெரிவித்துள்ளதோடு, இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்த இடமளிக்க வேண்டாம் என திருக்கேதீச்சர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் விரைவில் கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)


**கொரோனா தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் பிள்ளைகளுக்கு கொரோனா தொற்றுடன் தொடர்புபட்ட 'மிஸ் சி' Multisystem Inflammatory Syndrome in Children (MIS-C) நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.**

இது பிற்காலத்தில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா, சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளஅவர், இவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் நோய் நிலைமை மோசமடைந்து சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.எனவே, 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு விரைவில் கொரோனா தடுப்பூசி வழங்க எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(நி)

# தினம் ஒரு சுயமுன்னேற்ற சிந்தனைத் தேன்

## எதையும் ஆராய்ந்து செய்யுங்கள்




ஒருவன் ஒன்றை உண்மையென்று ஆராய்ந்து உறுதி செய்துவிட்டால்,அதைச் செய்து முடிக்கும் ஆற்றல், அவனுக்கு தானாகவே ஏற்பட்டுவிடும். -கெதே.

மிகச் சரியான செயலை, சரியான நேரத்தில்- சரியான வழியில், சரியான இடம் கண்டு செய்ய வேண்டும். ஆராய்ந்து- திட்டமிட்டு செய்தல் வேண்டும். அப்படி செய்தால் எச்செயலும் தோல்வியே காணாது.

ஆராயாத அவசர கோலத்தில் எடுக்கும் முடிவுகள் எப்போதும் தவறாகவே இருக்கும். இதுகுறித்து வள்ளுவர் பல அதிகாரங்கள் அமைத்து வழிகாட்டுவார்.

ஆராய்ந்து பார்க்கும்போது உங்களுக்கு ஒரு மனோ பலம் வந்து விடுகிறது. உங்கள் மனம் தான் உங்களுக்குப் பலம். அது பலவீனமாகி விடக் கூடாது.

"ஆற்றல்களில் மிஞ்சிய ஆற்றல் மனிதனின்
மன ஆற்றல்தான்" -ஸ்டாலின்

சொன்னது துணிவு மிக்க ஸ்டாலின் . புரட்சியால் ஒரு நவீன ரஷ்யாவை லெனின் இவரிடம் கொடுக்க,அதனை ஓர் ஆற்றல் மிக்க நாடாக திட்டமிட்டு ஆக்கியவர் இவரே.மன ஆற்றல்மிக்க அற்புத மனிதரான ஸ்டாலின் கருத்து கெதேயின் கருத்தோடு ஒத்துப் போகிறது.

இரண்டையும் இணைத்து சிந்தியுங்கள். யோசியுங்கள். உங்கள் மன ஆற்றலால் உங்கள் செயலைத் திட்டமிடுங்கள். நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் எதற்காக ஆசைப்படுகிறீர்கள்? உங்கள் லட்சியம் என்ன? உங்களின் எல்லை எது?

இப்படியான பல கேள்விகளை நீங்களே உங்களை கேட்டுக்கொள்ளுங்கள்.

அவசரமில்லை.சிலகாலம் காத்திருங்கள், தனிமை கிடைக்கும் போது எல்லாம் , வாக்கிங் போகும்போது எல்லாம்,மொட்டை மாடியில் நிலா பார்த்து- வானம் பார்த்து நட்சத்திரம் பார்த்து ரசிக்கிற அமைதி நேரத்தில் எல்லாம் உங்கள் மனதில் மேற்கண்ட கேள்விக்கு பதில் தேடுங்கள்.

கிடைக்கிற பதிலை எழுதி வையுங்கள். நேரம் கிடைக்கும் வேளையில் அது குறித்து யோசியுங்கள். நண்பர்களுடன் விவாதியுங்கள். குடும்பத்தாருடன்- உறவினருடன் அதனைப் பகிர்ந்து கொள்ளுங்கள். தேவைப் பட்டால் அவை குறித்த நூல்கள் படியுங்கள். இவையெல்லாம் ஒரு அடிப்படை முயற்சியே.

ஆயிற்று.

இனி முடிவெடுக்கும் தருணம். முடிவு உங்கள்கையில். உங்கள் லட்சியம் படிப்பாகட்டும். தொழிலாகட்டும் கலைத்துறையாகட்டும்... அது எதுவோ... அதனை யாரும் உங்கள் மீது திணிக்க முடியாது. உங்கள் மனதில் நீங்களே துணிவுடன் திணித்துக் கொண்டதாக இருக்கட்டும்.

வெற்றியோ இல்லை தோல்வியோ அது உங்களால் உங்களுக்கு வரட்டும். உங்கள் வெற்றிக்கு நீங்களே உரிமையாளராக இருப்பது ஒரு ஆத்ம திருப்தி.

அதுபோலவே உங்கள் தோல்விக்கும் -பிறரை- சந்தர்ப்பத்தை- அதிர்ஷ்டத்தைக் காரணமாக்கி விடாதீர்கள்.புலம்பாதீர்கள்.

எதுவும் உங்களால் வந்தது.

வெற்றியா? மகிழ்வோம். இன்னும் எட்டிப் பிடிப்போம்.

தோல்வியா? பாடமாகட்டும். அடுத்த முயற்சி தொடரட்டும்.

-இப்படித்தான் தொடங்க வேண்டும். அதை விட்டுப் புலம்புவதால் அர்த்தமேயில்லை.

எதுவும்-எதிலும் நிரந்தரமாக முடிவதே இல்லை.முடிவிலும் ஒரு தொடக்கம் இருக்கிறது.

மனதில் திட்டம்.செய்து முடிக்கும் ஆற்றல்.

அப்புறமென்ன? வாழ்க்கை உங்கள் காலடியில். உலகம் உங்கள் ஙகையில். முடிவோ முயற்சியோ உங்கள் மனதில்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## டிப்பர்- மோ.சைக்கிள் மோதி 11 வயது சிறுமி உயிரிழப்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டை மீகஹஜதுர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 11 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீகஹஜதுர நோக்கிச் சென்ற டிப்பர் வாகனம் அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்த சிறுமி மல்பெட்டாவ, அம்பலாந்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (நி)

## 37,500 மெட்றிக் தொன் டீசலை விடுவிக்க பணம் செலுத்தப்பட்டது

(கொழும்பு)

சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சொந்தமான கப்பலில் கொண்டு வரப்பட்ட 37,500 மெட்ரிக் தொன் டீசலை விடுவிப்பதற்காக எரிசக்தி அமைச்சகம் பணம் செலுத்தியுள்ளது.

அதன்படி நேற்று முன் தினம் இரவு 35.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த டீசல் தொகை விரைவில் தரையிறக்கப்படும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 450 |
| தக்காளி | 230 | 240 | 180 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 160 | 150 |
| கரட் | 350 | 450 | 450 | 480 |
| பூசணி | 120 | 140 | 140 | 160 |
| புடோல் | 180 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 150 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 120 | 160 |
| பாகற்காய் | 200 | 250 | 300 | 320 |
| வெண்டிக்காய் | 160 | 220 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 120 | 160 | 150 |
| பீற்றூட் | 140 | 180 | 200 | 200 |
| கறிமிளகாய் | 350 | 450 | 450 | 500 |
| முருங்கைக்காய் | -- | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | -- | 170 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 50 | 100 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 160 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 70 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 120 | 70 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத கலாசாரத்தை பிரபாகரனுக்கு கற்றுக் கொடுத்தது ஜே.வி.பி

## ராஜித சாடல்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு ஆயுத கலாசாரத்தை கற்றுக் கொடுத்தவர்கள் ஜே.வி.பி யினர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன குற்றம் சாட்டினார்.

இரண்டு பிரதான கட்சிகளும் நாட்டுக்கு எதனையும் செய்யவில்லை என ஜே.வி.பி சுமத்தி வரும் குற்றச்சாட்டு குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

1971 ஆம் ஆண்டு இந்த நாட்டுக்கு ஆயுத கலாசாரத்தை அறிமுகம் செய்தவர்கள் யார்? ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனைச் செய்யவில்லை.

இந்த ஆயுத கலாசாரத்தையே பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கற்றுக்கொண்டார்.

1989 ஆம் ஆண்டில்ஜே.வி.பி இந்த நாட்டுக்கு மீண்டும் பாரிய அழிவினை ஏற்படுத்தியது. இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய அழிவுகளை ஏற்படுத்திய தரப்பே இந்த ஜே.வி.பி யாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை விடவும் இலங்கையில் பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. எனவே ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவை என ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (நி)

# கொரோனா தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்று காரணமாக நாளாந்தம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாக பொறளை லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனை அறிவித்துள்ளது.

அண்மைய நாட்களில் கொவிட் தொற்று க்கு சமனான வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் போன் றன பரவி வருவதனால், பெற் றோர்கள் தமது குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் மருத்துவமனை பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார். (நி)

# நாளாந்த எரிபொருள் தேவை அதிகரிப்பு கட்டுப்படுத்துமாறு வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் நாளாந்த எரிபொருள் தேவை அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

மேலும், ஒரு வாரத்திற்கு 5,500 மெற்றிக் தொன்னாக இருந்த டீசலுக்கான கேள்வி தற்போது 8,000 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளதாக அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதேபோல், 3,000 மெற்றிக் தொன்னாக இருந்த பெற்றோலுக்கான வாராந்த கேள்வி, 4,500 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இது ஒரு பாரதூரமான நிலை என்று சுட்டிக் காட்டிய அவர், இதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (நி)

# எரிபொருளை மறைத்து வைக்கும் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

எரிபொருளை மறைத்து வைத்து விற்பனை செய்யும் நிரப்பு நிலையங்கள் தொடர்பில் சோதனைகளை மேற்கொள்வதற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளை மறைத்து வைத்துக்கொண்டு, நுகர்வோருக்கு வழங்காதுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜயசிங்க குறிப்பிட்டார். (நி)



மன்னார் மாவட்ட சாரணர் சங்கத்திற்கு புதிய உத்தியோகபூர்வ அலுவலகம் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட செயலாளரும், மாவட்ட சாரணர் சங்கத்தின் தலைவருமான திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)

# இன்று ஒரு தகவல்

## யார் விட்டுக் கொடுப்பது?

ஒவ்வொரு பொருளும் வெவ்வேறான மூலகங்களைக் கொண்டவை. அவற்றை உருக்கவும், மாற்றவும் பதப்படுத்தவும் அவ்வவற்றின் தன்மைகளுக்கு ஏற்ற வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும். இவை விஞ்ஞானம் கூறும் உண்மைகள்.

ஆக ஒரே விதி அனைத்திற்கும் பொருந்தாது. அதே போல் மனிதர்கள் மனத்தளவில் பெரிய வேறுபாடு கொண்டவர்கள். எட்டாத எல்லையைக் கொண்ட மன விகாரங்களை உடையவர்கள். நம் சக்திக்கு உட்பட்ட அளவில் நம்மைச் சுற்றி யிருப்பவர்களின் சுபாவங்களைப் புரிந்து கொண்டு அந்தப் போக்கில் அவர்களை விட்டுப் பிடிக்க வேண்டும்.

இப்படிச் செய்வதில் மூன்று வகையான நன்மைகள் இருக்கின்றன. மற்றவர்களை நீங்கள் மகிழ்ச்சியுடன் வைத்திருக்க முடியும், நீங்கள் பாராட்டைப் பெறுவதோடு அவர்களின் இதயத்தில் பெரும்பகு தியை ஆக்ரமித்துக் கொள்ளவும் முடியும்.

இவ்வளவு சிறந்த நன்மைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து வைத்துக்கொண்ட பிறகு ஒருவரால் வெற்றிகரமாகச் செயற்பட முடிவில்லை என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும்.

முதலாவது, பொதுவான சில நியதிகளை, நிர்ண யித்துக் கொண்டு அந்த முறையிலேயே அனை வரையும் அணுகுவது. இரண்டாவது, மற்றவர்களின் மனநிலைக்கு ஏற்ப அணுகு முறைகளை மாற்றிக் கொள்ளச் சிலரது தன்மானம் இடங்கொடுக்காது.

பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் இல்லற வாழ்வை நடத்திய ஒருவன் (அல்லது ஒருத்தி) தன் மனைவியுடன் (அல்லது கணவனுடன்) ஒத்துப் போகவில்லை என்றாலோ, அதைவிட அதிக வருடங்கள் தொடர்புள்ள ஒரு வீட்டு க்காரர் – குடித்தனக்காரர் உறவோ, தொழிலாளி முதலாளியிடையிலான உறவோ, நண்பர்களிடை யிலான உறவோ சுமுகமாக இல்லையென்றால், ஒருவரையொருவர் புரிந்துகொண்ட பிறகும், சரி செய்து கொண்டு போக அவர்கள் மனம் இடந்தர வில்லை என்றுதானே பொருள்?

அவர்கள் சுபாவம் தெரிந்தது தான் என்று நம் மனத்தைச் சரி செய்து கொண்டு போகாமல், போலி யான உள்ளுணர்வுகளைப் பெரிதாக்கிக் கேலிச் சிரிப்பிற்கும், பழி பாவத்திற்கும் உள்ளாகும் வாழ் க்கை என்ன வாழ்க்கை?

யார் முதலில் விட்டுக் கொடுப்பது என்று கேள்வியைப் பெரிதுபடுத்தாமலிருந்தால், விட்டுக் கொடுத்த பெருமையை நாம் அடைவதோடு மெல்ல அவர்களை நம் வசப்படுத்திவிட முடியும்.

மேலும் விட்டுக் கொடுப்பது என்பது இருவருக்குள் முடிந்து போகிற பிரச்சினை. விட்டுக் கொடுக்க மாட் டேன் என்பது ஊருக்கெல்லாம் தெரியப் போகிற பிரச்சினை.

விட்டுக் கொடுப்பதன் மூலம் அடையப் போகும் சில சிறிய நட்டங்களைப் பொருட்படுத்தாதவர்கள், முன்னர் கூறிய பல பெரிய நன்மைகளை அடைய முடியும். இவை, கண்கூடான உண்மைகள்.


லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வாசனையைத் திருடியவள்



ஆபிரிக்காவின் இபெடுமோடு என்ற கிராமத்தில் ஏழ்மையான ஒருத்தி வாழ்ந்து வந்தாள்.

அவள் தினமும் குடிக்கும் கூழுடன் ஒரு சூப் செய்து சாப்பிடக் கூட முடியாத அளவுக்கு வறுமையில் வாடிப் போயிருந்தாள். கூழ் இல்லாத சூப் முழுமையான உணவாக இருக்காது. இருந்தாலும் அந்தக் கூழ் கூட ஒரு நாளில் ஒரு வேளை மட்டும்தான் அவளுக்குக் கிடைத்தது.

ஆனால், அவள் வசித்த தெருவில் அவளுடைய குடிசைக்கு அருகிலேயே மற்றொரு வீட்டில் ஒருத்தி தினமும் கூழ் சமைத்து விட்டு அதனுடன் சாப்பிடுவதற்கு மணக்க மணக்க சூப் தயாரிப்பாள்.

ஒருநாள் தனக்கு முன்னால் சின்ன கிண்ணத்தில் கூழை வைத்துக் கொண்டு சாப்பிடுவதற்காக உட்கார்ந்திருந்தாள்.

பக்கத்து வீட்டில் உள்ள பெண் சூப் தயாரிக்கும் வாசனை அவள் வீட்டு ஜன்னல் வழியாக வருவதை முகர்ந்தாள். அந்த மணம் அவளுக்கு நாவில் எச்சில் ஊற வைத்தது. அந்தப் பெண்ணிடம் போய் கொஞ்சமாக சூப் கேட்டால் தர மாட்டேன் என்றா சொல்லப் போகிறாள் என நினைத்தாள்.

தன் சின்னக் கிண்ணத்தைத் தூக்கிக் கொண்டு அந்த வீட்டு வாசலில் போய் நின்று, “என்னுடைய கொஞ்சம் கூழுக்கு உன் சூப் கொஞ்சம் தருகிறாயா?” என்று கேட்டாள்.

சூப் சமைத்துக் கொண்டிருந்தவள் குரலைக் கேட்டுவிட்டு தன் பக்கத்து வீட்டில் இருக்கும் வாடிப் போன பெண்ணா வந்து நிற்கிறாள் என்று தெரிந்து கொண்டாள்.

“உனக்கு ஒரு சூப் கூட தயாரித்துக் கொள்ள முடியவில்லை என்றால் வேறு எதுவுமே உனக்குக் கிடைக்கப் போவதில்லை” என்று எரிச்சலுடன் மறுத்து விட்டாள்.

ஏமாற்றத்துடன் தன் குடிசைக்குத் திரும்பிய ஏழைப் பெண் அவள் வீட்டு ஜன்னல் வழியே வாசனை கமகமவென்று வந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள். கூழ் கிண்ணத்துடன் ஜன்னலருக்கே சென்ற அவள் சூப் கொதிக்கும் வாசனையை நன்றாக முகர்ந்து கொண்டு கொஞ்சம் கூழ் குடித்தாள்.

அப்படியே சூப் வாசனையை மூக்கால் இழுத்துக்கொண்டு ஒரு வாய் கூழ் குடிப்பதை திரும்பத்திரும்பச் செய்தாள். அவன் வாசனை பிடிக்கும் சத்தத்தைக் கேட்டு ஜன்னல் பக்கம் திரும்பியவள், என் சூப்பின் வாசனையை நீ முகரக் கூடாது” என சண்டை பிடித்தாள்.

அவள் பேச்சுக்குப் பதில் சொல்லாமல் சூப் வாசனையை முகர்ந்து ரசித்தபடி தன் கூழ் கிண்ணத்தைக் காலி செய்தாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




காடும் மேடும் கடந்தவர் நகரச் சூழலை அடைந்தனர்; மிதிலையின் மதிலையும், அகழியையும், சோலைகளையும் கடந்து நகருக்குள் புகுந்தனர்; அந்நகரத்துப் பெரு வீதிகளையும், கடை வீதிகளையும், அரச வீதிகளையும் கடந்து கன்னி மாடம் இருந்த தெரு வழியே நடந்து சென்றனர்.

அந்தத் தெருவில் கன்னி மாடத்து மாளிகையில் எழில்மிக்க நங்கை ஒருத்தி நின்று கொண்டு, அம் மாளிகையின் கீழே முற்றத்தில் அன்னமும் அதன் துணைப் பெடையும் அன்புடன் களித்து ஆடும் அழகைக் கண்ட வண்ணம் இருந்தாள்.

முனிவர் பின் சென்ற இராமன், மாடத்துப் புறாவைக் கண்டு வியந்தான். பொன்னை ஒத்து ஒளி பொருந்திய மேனியும், மலர்க் கூந்தலும், கண்ணைக் கவரும் அழகும் அவனைக் கவர்ந்தன. அக் கோதையாள் சனகன் மகள் சீதை என்பது அவனுக்குத் தெரியாது. அவளுக்கும் அவ்விளைஞன் யார்? என்பதும் தெரியாது; “அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்; இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்”. மாடத்தில் இருந்தவள் அவன் நெஞ்சில் குடி புகுந்தாள். முற்றத்தில் நடந்த இளைஞன் அவள் நெஞ்சில் குடி புகுந்து விட்டான். அவள் அவனுக்குச் செஞ்சொற் கவி இன்பமாக விளங்கினாள்.

### சந்திப்பு

முனிவர் முன்னே நடந்தார்; அவர்பின் இராமன் தொடர்ந்தான். திட்டமிட்டபடி மூவரும் சனகன் அரண்மனையை அடைந்தனர். அவன் விருந்தாளிகளாய் மூவரும் அங்கு தங்கினர். இராமன் நெஞ்சில் சீதையைச் சுமந்து அவள் நினைவாகவே இருந்தான்; அவளும் இராமன் நினைவே நிறைந்தவளாய் இருந்தாள். புதிய வேட்கையில் அவர்கள் நெஞ்சங்கள் பதிந்து கிடந்தன.

சனகன் ஒரு பெரு வேள்வி நடத்தினான். அதில் பங்கு கொள்ள முனிவர்களும் அந்தணர்களும் வந்து சேர்ந்தனர். மாமன்னனை மறையோர்கள் வாழ்த்தினர். அரண்மனையில் அகலமான ஒரு பெரிய கூடத்தில் சனகன் வந்து அமர்ந்தான்; குழுமி இருந்த விழுமிய முனிவர்களோடு அளவளாவி அவர்கள் நல்லாசியைப் பெற்றான்.

விசுவாமித்திரரோடு வந்திருந்த அரசிளங் குமரர்களான இராம இலக்குவரை சனகன் கவனித்தான். பெண்ணைப் பெற்றவன் ஆயிற்றே அதனால், அவன் கண்கள் தன் மகளுக்குத் தக்க மணாளனைத் தேடியது. “முருகனைப் போன்ற அழகன் தன் மருகனாக மாட்டானா”? என்று ஏங்கினான்.

“யார் இந்தக் காளையர்? அம் முனிவரோடு ஏன் வந்தனர்?” என்று கேட்டுத் தெரிந்து கொள்ள விழைந்தான் சனகன். ஏன் அவர்களைப் பற்றி இவன் விசாரிக்க வேண்டும்? மகளைத் தருவதற்கு அவன் அடி போடுகிறான் என்பதை அறிந்து கொண்டார் விசுவாமித்திரர். இராமன் குலப் பெருமையையும், அவன் நலங்களையும் விபரித்தார். “அவர்கள் கோசல நாட்டு மன்னன் தசரதன் அரும் புதல்வர்கள்” என்று தொடங்கி அவர்கள் தமக்காக வனத்துக்கு வந்து அரக்கர்களை விரட்டியதையும், செய்த வீரச் செயல்களையும் விளக்கமாக உரைத்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனுடைய அறிவு நியாயமாக இல்லையோ அவன் எளிதில் கோபத்துக்கும் தீய எண்ணங்களுக்கும் கடுமையான சொற்களுக்கும் இடம் கொடுத்து விடுவான். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திட்டமிட்டு ஏமாற்றும் சட்டம் விழிப்பாக இருப்பது அவசியம்

நாடு பொருளாதாரத்தில் மட்டுமல்ல, சட்டத்தை நிலைநாட்டுவதிலும் இடர்பாட்டை எதிர்நோக்கியுள்ளது.

ஆம், அண்மைக்காலமாக இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் மந்த நிலையும் கடுமையான பணவீக்கமும் பொருட்களின் விலைகளைக் கண்டபாட்டில் அதிகரித்து விட்டது.

இந்த அதிகரிப்பு முற்றுப்பெற்று விட்டதா? என்றால் இல்லவே இல்லை. நாளுக்கு நாள் பொருட்களின் விலை எகிறிக் கொண்டிருக்கிறது.

இதற்கு மேலாக பால்மா, சீமெந்து உள்ளிட்ட பொருட்களுக்கு நிலவுகின்ற தட்டுப்பாடு; குறித்த பொருட்களின் விலைகளைப் பன்மடங்கு உயர்த்தி வருகிறது.

இந்த நிட்டூரத்தின் மத்தியில் போதைவஸ்து விற்பனையும் அதன் பயன்பாடும் இளம் சமூகத்தைச் சீரழித்து சின்னாபின்னப்படுத்தி நிற்கிறது.

ஒருபுறம் பொருளாதாரப் பெருமந்தம். மறுபுறம் பொருட்களின் அதீத விலையேற்றம் இதற்கு மேலாக, போதைப் பயன்பாடு என்ற நிலையில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாத கட்டத்தை நோக்கி நாடு பயணித்துக் கொண்டிருக்கிறது, என்பதை உணரமுடியும்.

இதனை உறுதி செய்வதாகத் திருட்டுச் சம்பவங்களும் களவுகளும் கொள்ளைகளும் கொலைச் சம்பவங்களும் நடந்தாகின்றன.

ஆம், கடந்த இரு தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டம் பகுதியில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண்ணை அடித்துக் கொலை செய்துவிட்டு அவரிடம் இருந்த நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆக, இலங்கைத் தீவின் இன்றைய சூழ் நிலையில் தனிமையில் இருப்பவர்களின் நிலைமை மிகவும் ஆபத்துக்குரியதாகவுள்ளதென்பதை உணர முடியும்.

இதுஒருபுறமிருக்க, களவும் கொள்ளையும் என்ற வகுதிக்குள் அடக்கமுடியாத ஏமாற்றுச் சம்பவங்களைக் கேள்விப்படும்போது தலைசுற்றுகிறது.

தொலைபேசி அழைப்பில் தொடர்பு கொண்டு, உங்களுக்குப் பண உதவி செய்யவுள்ளோம். உலர் உணவுப் பொருட்களைத் தொடர்ச்சியாக வழங்கவுள்ளோம்.

எனவே அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பத்தாயிரம் ரூபாய் பணத்தை உடனடியாக வைப்பிலிடுங்கள் என்று கூற, ஏழை மக்கள் அதனை நம்பி இருப்பதையெல்லாம் வடித்துத் துடைத்து அனுப்பிவிட, அத்தோடு அந்தத் தொலைபேசி இலக்கம் செயலிழந்து போகிறது.

இவ்வாறு ஏமாற்றுகின்றவர்கள் குறித்த தொலைபேசி இலக்கங்களை பொது அமைப்புகளிடம் இருந்தும் சமூக நலன்விரும்பிகளிடம் இருந்தும் பெற்றுக் கொள்கின்றனர்.

வறுமைப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கவுள்ளோம். அந்த உதவி யாருக்கு வழங்கப்பட வேண்டுமோ அவர்களின் தொலைபேசி இலக்கத்தைத் தாருங்கள் என்று கேட்க; பொது அமைப்புகளும் நல்ல காரியம் நடக்கட்டும் என்று எண்ணி, உதவி கிடைக்க வேண்டியவர்களின் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்துவிட, அதனூடாக ஏமாற்றுபவர்கள் தங்கள் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்த ஏமாற்றுத்தனங்கள் இன்னும் வெவ்வேறு வடிவங்களில் தொடரவே செய்யும்.

எனவே இது விடயங்களில் பொதுமக்கள் மிகவும் நிதானமாகவும் விழிப்பாகவும் இருப்பதன் மூலமே மோசடிகளை – ஆபத்துக்களைத் தடுக்கவும் தவிர்க்கவும் முடியும்.

# குற்றவாளி என்றால் தண்டியுங்கள் சந்தேக நபராக சிறை வைக்காதீர்கள்

## பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதானவரின் மனைவி உருக்கமான கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கடந்த இரண்டு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள எனது கணவர் குற்றம் செய்திருந்தால் தண்டனை வழங்குங்கள். சந்தேக நபராக சிறையிலிட்டு காலத்தை வீணடிக்காதீர்கள் என அவரது மனைவி உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி இடம் பெற்ற போராட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2020ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் எனது கணவரை விசாரணை என்ற அடிப்படையில் வரவழைத்து கைது செய்தார்கள்.

பின்னர் விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் என காரணம் கூறி எனது கணவரை தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.

எனது கணவர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் கீழ் பாதுகாப்பு அமைச்சில் உள்ளடக்கப்படுகின்ற சிவில் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய நிலையில் எனது கணவர் தொடர்பான அனைத்து விபரங்கள், தொலைபேசி இலக்கங்கள் ஏற்கனவே பாதுகாப்புத் தரப்பிடம் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் விடுதலைப் புலிகள் மீளுருவாக்கம் என்ற போர்வையில் சந்தேக நபராக எனது கணவரை தடுத்து வைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கப்படுகின்றனர் என்றால் அதை காண்பியுங்கள் பார்ப்போம்.

30 வருட வாழ்க்கையில் பத்து வருடமாக நான் முன்னாள் போராளியாக இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு வெளியே வந்தேன்.

எங்களுக்கு திருமணமாகி மூன்று பிள்ளைகள் இருக்கின்ற நிலையில் யுத்த காலத்தில் நாங்கள் அனுபவித்த வேதனையை விட யுத்தம் முடிவடைந்தபின் அனுபவிக்கின்ற வேதனை அதிகமாக உள்ளது.

எனது கணவர் எவ்விதமான குற்றங்களும் செய்யவில்லை என எனக்கு தெரியும். குற்றம் செய்திருந்தால் அவர் செய்த குற்றத்தை நிரூபித்து தண்டனை வழங்குங்கள்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் எனது கணவரை அழைத்து வருவார்கள் என நம்பிக்கையுடன் பல தடவைகள் காலையிலிருந்து மாலை வரை காத்திருந்து ஏமாற்றம் அடைந்தேன்.

எனது கணவரை விடுதலை செய்வதற்காக பல இடங்களுக்கு சென்றும் பயனளிக்கவில்லை.

குற்றம் நிரூபிக்கப்படாமல் எனது கணவரை தொடர்ந்தும் சந்தேக நபராக தடுத்து வைக்காமல் விரைவாக விடுதலை செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

(ம)

## புனருத்தாபன ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இராசதானியின் தோரணவாசல் புனருத்தாபனம் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண மரபுரிமை மையம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையில் நாளை வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் மற்றும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ் தலைமையில் மேற்படி நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-33,104)

## பருத்தித்துறையில் விபத்து; இருவர் படுகாயம்

(அராலி)

பருத்தித்துறை - கிராமக்கோட்டுப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அதிவேமாக செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று எதிரே வந்த முச்சக்கவரண்டி மீது மோதியதுடன், பேருந்துக்காக காத்திருந்த கூலித்தொழிலாளியான முதியவர் ஒருவரை மோதி, அதன் பின்னர் மற்றொரு முச்சக்கரவண்டி மோட்டார் சைக்கிளை மோதி வீழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தின்போது விபத்தில் சிக்கிய கூலித் தொழிலாளியான முதியவரின் கால் உடைந்துள்ளது.

மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற இளைஞர் காயமடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-104)

## ஹெரோயின் போதையுடன் வட்டுக்கோட்டையில் ஒருவர் கைது

(அராலி)


வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேரம் பகுதியில் 33 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே சந்தேகநபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ம-104)

## சத்திய தரிசனம்



- காற்றே வா தென்றலாய் வா, புயலாய் வந்து வருத்தாதே, நெருப்பே வா ஒளியாய் வா, எரிமலையாய் வந்து பொசுக்காதே, நீரே வா பன்னீராய் வா, சுனாமியாய் வந்து வாட்டாதே, ஓம் காரம் தரும் ஆகாயம், அகழ்வாரைத் தாங்கும் நிலமே வா (2)
- இறைவா எம்மிடம் வா- எம், வாழ்வு வளம் பெற வா, இறைவா ஓடி வா, எம் வாழ்வு நலம் பெற வா, இறைவா இறங்கி வா, எம் வாழ்வு மலர்ந்திட வா.
- நல்லதைப் பார்ப்போம், நல்லதைக் கேட்போம், நல்லதையே செய்வோம்,
இதுவே வாழும் வழி, நமக்கிதுவே வாழும் வழி
- அன்புடன் வாழ்ந்து, அறத்தினைப் போற்றி, அமைதியுடன் வாழ்வோம்,இதுவே வாழும் வழி, நமக்கிதுவே வாழும் வழி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை



கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 04

**அறிக்கையில் குழுவின் நியமனம், எல்லை நிர்ணயம் தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் சட்டம், குழுவின் விடயப் பரப்பெல்லை. நடபடி முறை, தேர்தல்தொகுதிகளுக்கமைய நிர்வாக மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, தேர்தல் தொகுதிகளை வேறு பிரிப்பதோடு தொடர்புடைய அளவீட்டு முறைகள் மற்றும் பிரதிநிதித்துவ முறை தொடர்பான விளக்கங்கள் என்பன உள்ளடக்கப் பட்டுள்ளன.**

அத்தியாயம் 14 இல், 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 9 மாகாணங்களுக்குள் அமையப்பெற்றுள்ள 25 நிர்வாக மாவட்டங்களை 222 மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளாக வேறு பிரிக்கும் பணியை நிறைவு செய்து, அதுபற்றிய அறிக்கையை மிகக் குறுகிய காலத்திற்குள் தயாரித்து முடிப்பதற்காக குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் நன்றி கூறல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்புகள் A யிலும் B யிலும் தேர்தல் தொகுதிகளில் அடங்கியுள்ள கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் கிராம அலுவலர் பிரிவு - இலக்கமும் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளன.

பின்னிணைப்புகள் I முதல் IX வரை கொடுக்கப்பட்டுள்ள தகவல்களாவன, 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் 3A (1) ன் படி எல்லை நிர்ணயக்குழு நியமனம். 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய குழுவின் பொறுப்புக்கள்.

மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முன்மொழிவுகளை பெறுவதற்கான பத்திரிகை அறிவித்தல். தேர்தற்றொகுதிகளை வேறு பிரித்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள், பொதுசன அமைப்புக்கள் மற்றும் பொத்மக்கள் ஆகியோரிடமிருந்து கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் மாவட்டக் கூட்டங்களில் பெற்றுக்கொள்வதற்கான ஊடக அறிவித்தல்.

மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முன்மொழிவுகளை பெறுவதற்கான நிகழ்ச்சித் திட்டம். எழுத்து மூலமாக முன்மொழிவுகளை தந்த அரசியல் கட்சிகள், பொதுசன அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பெயர் பட்டியல் (மாவட்ட ரீதியில்). மாவட்ட கூட்டங்களில் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் முன்மொழிவுகளை தந்த அரசியல் கட்சிகள், பொதுசன அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பெயர் பட்டியல் (மாவட்ட ரீதியில்). எல்லை நிர்ணயத்தின் போது பயன்படுத்தப்பட்ட தரவுகள். மாவட்ட கூட்டங்களின் போது எடுக்கப்பட்ட படங்கள் என்பவை ஆகும்.

தொகுதி II இல் ஒவ்வொரு மாவட்டத்தினுள்ளும் வரும் தேர்தல் தொகுதிகள் அடங்கிய 25 மாவட்டத்திற்குமான படங்கள் கொண்ட தொகுதி ஆகும்.

### தொகுதிகள் எவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படுகின்றன?

தொகுதிகள் எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. எந்தவொரு தேர்தலுக்குமான தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. முதலாவது படி எல்லை நிர்ணயம் எவ்வாறு செய்யப்பட வேண் டும் என்பதாகும். இதில் நியமிக்கப்படும் குழுவுக்குரிய அதிகாரம், ஆசனங்களின் எண்ணிக்கை, எல்லை வரம்புகள், பொறிமுறைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இச் செயல்முறைக்கான அடிப்படை அளவு கோலானது அரசியலமைப்பினால் அல்லது சட்டங்களினால் கொடுக்கப்படுகின்றன. இச் சட்டம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படுகின்றது.

இரண்டாவது படியில் முதலாவது படியில் கூறப்பட்ட எல்லை வரம்புகளுக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்வதாகும். இதில் இரண்டாவது படியே நியமிக்கப்படும் எல்லை நிர்ணயக் குழுவினால் செய்யப்படுகின்றது. நியமிக்கப்படும் குழு சுயாதீனமாக இயங்கினாலும் சட்டத்தின் மூலம் அவர்களின் செயற்பாட்டிற்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டிருக்கும்.

**எந்தவொரு தேர்தலுக்குமான தேர்தல்தொகுதிகளின்எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. முதலாவது படி எல்லை நிர்ணயம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதாகும். இதில் நியமிக்கப்படும் குழுவுக்குரிய அதிகாரம், ஆசனங்களின் எண்ணிக்கை, எல்லை வரம்புகள், பொறிமுறைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இச் செயல்முறைக்கான அடிப்படை அளவு கோலானது அரசியலமைப்பினால் அல்லது சட்டங்களினால் கொடுக்கப்படுகின்றன.**

**எல்லை நிர்ணயத்தின் இரண்டாவது படியில் முதலாவது படியில் கூறப்பட்ட எல்லை வரம்புகளுக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்வதாகும். இதில் இரண்டாவது படியே நியமிக்கப்படும் எல்லை நிர்ணயக் குழுவினால் செய்யப்படுகின்றது. நியமிக்கப்படும் குழு சுயாதீனமாக இயங்கினாலும் சட்டத்தின் மூலம் அவர்களின் செயற்பாட்டிற்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும்.**

### கலப்பு தேர்தல் முறைமை என்றால் என்ன?

தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார முறை என்பவற்றின் கலவையான புதிய தேர்தல் முறை கலப்புத்தேர்தல் முறைமையாகும். இதன் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் தொகுதிவாரி முறையை உள்ளடக்கியதாகவும் மிகுதி சத வீதம் விகிதாசார முறையை உள்ளடக்கியதாகவும் அமைந்திருக்கும்.

**தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார முறை என்பவற்றின் கலவையான தேர்தல் முறை கலப்புத்தேர்தல் முறைமையாகும். இதன் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட சதவீதம்தொகுதிவாரிமுறையை உள்ளடக்கியதாகவும் மிகுதி சதவீதம்விகிதாசாரமுறையை உள்ளடக்கியதாகவும்அமைந்திருக்கும்.**

### கலப்பு தேர்தல் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு தோன்றியது எப்போது?

1947 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறையில் இருந்த தொகுதிவாரி தேர்தல் முறையானது "வாக்காளருக்கு இலகுவான" (Voter Friendly) தொகுதிக்கு ஒரு உறுப்பினரை தெரிவு செய்து கொள்ளும் இலகுவான வழிமுறையாக அமைந்தது. இம் முறைமையின் கீழ் தேர்தல் தொகுதியின் அதி கூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்.

எனினும் அதன் பிரதான குறைபாடாக அமைந்தது என்னவெனில் செல்லுபடியான எல்லா வாக்குகளுக்குமான பிரதிநிதித்துவத்தை அது உறுதி செய்யவில்லை. தோல்வியடைந்த வாக்களார்களுக்கு வழங்கப்பட்ட வாக்குகளுக்கு எந்தப் பெறுமதியும் இருக்கவில்லை. இதனால் 1978 இல் விகிதாசார தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1978 ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்தன அறிமுகப்படுத்திய விகிதாசார தேர்தல் முறையானது நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை அறிமுகத்தோடு உருவானது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையினுள் வாக்கெடுப்பு மாவட்டம் பரந்த நிலப்பகுதியினுள் வியாபித்து காணப்பட்டமையினால், அதுவரை மக்களுக்கு பழக்கப்பட்டு காணப்பட்ட வட்டாரத்திற்கு அல்லது தொகுதிக்கு பொறுப்புக் கூறுகின்ற உறுப்பினர் இல்லாமை காரணமாக சாதாரண வாக்காளர்களுக்கு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் இருக்கவில்லை.

**1947ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட தொகுதிவாரி தேர்தல் முறையில் பிரதான குறைபாடாக அமைந்தது என்னவெனில் செல்லுபடியான எல்லா வாக்குகளுக்குமான பிரதிநிதித்துவத்தை அது உறுதி செய்யவில்லை. தோல்வியடைந்த வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குகளுக்கு எந்தப் பெறுமதியும் இருக்கவில்லை.**

**ஒரு தேர்தலில் செல்லுபடியான எல்லா வாக்குகளுக்கும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யுமுகமாக 1978 ஆம் ஆண்டில் விகிதாசார தேர்தல் முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரைனில்...

அத்துடன், பொதுமக்கள் துப்பாக்கிகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க உக்ரைன் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

உக்ரேனியர்கள் துப்பாக்கிகளை எடுத்துச் செல்லவும் தற்காப்புக்காக செயற்படவும் அனுமதி அளிக்கும் சட்ட வரைவுக்கு உக்ரைன் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

"உக்ரைன் குடிமக்களுக்கு இருக்கும் அச்சுறுத்தல்கள் மற்றும் ஆபத்துகள் காரணமாக இந்த சட்டம் தேவைப்பட்டது" என உக்ரைன் அரசு அறிவித்துள்ளது. (ம)

## இன்றும்...

பிறப்பாக்கிகளை இயக்க தேவையான எரிபொருள் இல்லாத காரணத்தை சுட்டிக் காட்டி இலங்கை மின்சார சபையால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க மின் வெட்டுக்கான அனுமதியை வழங்கியுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது. (ம)

## 12 வயது சிறுமி...

ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக ஒப்படைக்கப்பட்டவர் அந்தரான் கரணவாயைச் சேர்ந்த பாஸ்கரன் பார்த்திகா (வயது-12) என்பவராவார்.

வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட அவரை உறவினர்கள் மீட்டு வந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தபோதும் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60,104)

## 3 தமிழ் அரசியல்...

மற்றும் பத்மநாதன் ஜங்கரன் ஆகியோரே இவ்வாறு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கரும்புலிகள் தினத்தை நினைவுகூர முயன்றமை மற்றும் தீய செயல்களை ஏற்படுத்தும் பொருட்டு வெடிபொருள் தயாரிப்புக்கு உதவியமை போன்ற குற்றச்சாட்டில் இரத்தினசிங்கம் கமலாகரன், வைத்தியலிங்கம் நிர்மலன், நல்லதம்பி நகுலேஸ்வரி மற்றும் பத்மநாதன் ஜங்கரன் ஆகியோர் கடந்த 2020ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 3 மற்றும் 06 ஆம் திகதிகளிலும் 2021ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 28ஆம் திகதியிலும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த சிறைக் கைதிகளின் உறவினர்கள் கைதிகளுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் நேற்று காலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதாபிமான அடிப்படையில் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ம-18,33,104)

## இந்திய மீனவர்...

கையில் ஈடுபடுவதை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி, அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தினர் நேற்று கோட்டை புகையிரத நிலையத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டு ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாக சென்றனர்.

இந்திய ட்ரோலர் படகு பாவனையினால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த இலங்கை மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்,

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையினை தடை செய் என பதாதைகளை ஏந்தியவாறு மீனவ சமூகத்தினர் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாக சென்றனர்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு ஒன்றியம், தேசிய மீனவு தொழிற்சங்கம், அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் உள்ளிட்ட பல மீனவ சமூக சங்கத்தினர் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

## 'டீசல் இல்லை'...

மடம் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இவ்வாறு "டீசல் இல்லை" என்ற பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

அத்தோடு குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அதிகமான மக்கள் கூட்டத்தையும் அவதானிக்க முடிந்துள்ளது. (ம-33)

## ஒத்துழைக்க...

நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இணைய வழி கலந்துரையாடல் ஒன்றின்

போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படும் நிதி நெருக்கடியை குறைக்க இந்தியா மற்றும் இலங்கை இடையே பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்ததாக அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

குறிப்பாக அந்நியச் செலாவணியை பேணுவதற்கும் எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கும் இந்தியா கடன் உதவியை வழங்கியுள்ளது.

இருப்பினும் கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக, இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்ய பணம் இன்மை காரணமாக மின்சாரம் துண்டிக் கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தட்டுப்...

இல்லை எனவும், விலை உயர்வாகவே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பால் மா மற்றும் சீமெந்து தொடர்பான பிரச்சினைக்கு இது வரை தீர்வு காணப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## மின்...

அவர், பொதுமக்களால் இது தொடர்பாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

தற்போது அமுல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது என கூறினார். (ம)

## தட்டுப்பாடின்றி...

இடம்பெற்ற, அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவூட்டும் அரச அதிகாரிகளுடனான விசேட சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களும் முறையாக பொதுமக்கள் சேவையை நிறைவேற்ற வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம)


தன நிதானய
திகதி - 2022.02.23
சீட்டிழுப்பு இலக்கம் - 717
J 08 49 65 74
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2982
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 14 25 46 70

மஹஜன சம்பத
திகதி 2022/02/23
சீட்டிழுப்பு இலக்கம் 4687
ஆங்கில எழுத்து B | வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 1 8 8 4 6
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.23
சீட்டிழுப்பு இலக்கம் 0028
ரிஷபம் 07 37 40 45 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1035
J 26 31 59 70 72

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1215
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 7 4 4 5 3 8
தேசிய லொத்தர் சபை

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 04 08 53 68 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 840
வர்ணம் பச்சை
திகதி 2022.02.23 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 215,701,555/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1664 | நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 23.02.2022 | தினம் புதன்
வெற்றி இலக்கங்கள்
M 04 35 65 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 60,701,379/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.23
சீட்டிழுப்பு இல: 3885
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,998,580/-
வெற்றி இலக்கங்கள் 08 37 51 69
ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,593,959/-
திகதி 23.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3376
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 13 15 21 46
சிம்மம்
6 1 8 6 5 1 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,481,620/-

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1814
சீட்டிழுப்பு திகதி 23.02.2022
வெற்றி இலக்கங்கள் 23 37 47 64
ஆங்கில எழுத்து I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31,811,580/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.23
சீட்டிழுப்பு இல: 1490
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,142,180/-
வெற்றி இலக்கங்கள் 30 32 59 63
ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

மனம் நிறைய பரிசுகளை வெல்லுங்கள்
NLB
விசேட மஹஜன சம்பத
MAHAJANA SAMPATHA
இலட்சம் பரிசுகள் 100
கோடிக்கணக்கான சுப்பர் பரிசுடன் விசேட பரிசுகள் ஏராளம்
ஸ்மார்ட் போன் லப்டொப்
சீட்டிழுப்பு பெப்ரவரி 28


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி, அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

A32 பிரதான வீதியில் இருந்து 600 மீற்றர் தூரம்

**பார்வையிடும் நேரம்**

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

**தரகர் தேவையில்லை.**

**விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**- 077 241 7589**

(10342)

## விரைவு பொதிகள் சேவை

## V2 TRAVELS

## UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3785)

**0768226240** DHL

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10334)

**076 825 7716 (ஆகாஸ்)**

## சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற கூட்டத்தை நடத்த போதியளவான உறுப்பினர்கள் எண்ணிக்கை இன்மையால், சபை நடவடிக்கை இன்றுவரை பிற்போடப்பட்டுள்ளது.

அதற்கமைய, இன்று காலை 10 மணிக்கு பாராளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது. (ம)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம். (வாகையடி சந்தி)

(10339)

**074 269 0854**

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் ஈழத்து சிதம்பர ஆதீன கர்த்தா

## முருகேசு சுந்தரலிங்கம்

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா எல்லாம்வல்ல தில்லைக்கூத்தன் திருவடி நிழல்களில் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:- பங்குனி 6ஆம் திருவிழா உபயகாரர்கள், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் (10337)

## PAPER CLASS

### அன்பொளி கல்வியகத்தின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2022

மாணவர்களுக்கான "PAPER CLASS" ஆரம்பமாகின்றன.

"விசேட வழிகாட்டல் பரீட்சைகள்", "தனித்துவமான தெளிவான நுட்பங்களுடனான விளங்கப்படுத்தல்"

ஆசிரியர்கள்

திரு.ப.பத்மநேசன் - யா/மகாஜனாக் கல்லூரி

திரு.என்.எஸ்.தீபன் - மீசாலை வீரசிங்க ஆரம்ப வித்தியாலயம்

- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விசேட வழிகாட்டல் பரீட்சையும், வினாத்தாள் விளக்கமளித்தலும் நடைபெறும்.
- ஆசிரியர்கள் இருவரினாலும் தயாரிக்கப்பட்ட தனித்துவமான வினாத்தாள்கள் பரீட்சைக்காக வழங்கப்படும்.
- பரீட்சைப் புள்ளிகள் வாரந்தோறும் வெளியிடப்படும்.

ஆரம்பம் - 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 - 10.30

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. இயக்குநர்

(10340)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

நடாத்தும்

## புத்தகக் கண்காட்சி







இடம்: ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.

காலம்: 25.02.2022 முதல் 27.02.2022 வரை

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை


விசேட விலைக்கழிவு 20% - 30%

இந்நிகழ்விற் கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

ஓம் நமசிவாய

## வாசகர் வாசகத்தை வாஞ்சையுடன் ஓதியவர் மறைந்த சுந்தரலிங்கம்



ஈழத்துச் சிதம்பரத்தின் அறங்காவலர். சிறந்த சிவபக்தர். இன்று நம்மை விட்டு, மண்ணுலக வாழ்வு நீத்து விண்ணுலகடைந்துவிட்டார். அமரர் சுந்தரலிங்கம் அவர்கள்தான் இன்று மறைந்த அற்புதமான மனிதர். பழகுவதற்கு இனியர். இன்சொல்லாளர். எல்லாவற்றையும்விட சிறந்த ஓதுவார். வாசகர் வாசகத்தை வாஞ்சையுடன் நெக்குருகிப் பாடுவார். கேட்போர் கண்களில் நீர் பெருகும். பண்முறை பிறழாது பாடுவார். சொற்பிழையோ, பொருட்பிழையோ இருக்காது. அப்படியே திருவாசகத்தை முல்லைப் பண்ணில் பாடுவது கேட்டு உருகாதார் எவருமில்லை என்றே சொல்லலாம். சிதம்பரத்தான் திருப்பாதம் மறவாத செல்வர். சிறந்த அறங்காவலர். இதற்கு இலட்சணமாய் வாழ்ந்தவர். நீறணிந்த நெற்றி. மேனியெங்கும் திரிபுண்டரமாக அணிந்த திருநீறும் கழுத்தில் உருத்திராட்ச மாலையும் பார்ப்பவர் கண்ணில் பக்தியை வரவழைக்கும் கோலம். இத்தியாகத் தன்மைகளோடு பல்லாண்டு காலம் அறங்காவலராகத் திகழ்ந்த செம்மல் சுந்தரலிங்கம் அவர்களின் மறைவு காரைநகருக்கு மட்டுமல்ல, சைவ உலகிற்கே பேரிழப்பாகும். அவரின் ஆன்மா ஈழச்சிதம்பரத்தான் திருவடியில் நித்தியமாய் இருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ஓம் நமசிவாய

**க.கு.க.சிவபாலன்**

அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார், மேனாள் பொருளாளர், போஷகர் (மாணிக்கவாசகர் மடாலயம்), பொருளாளர் (அகில இலங்கை திருமுறை மன்றம்)

(C-3836)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.